[7th September 1960

Village Vaidyas

*100 Q.—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any instruction has been received from the Central Government for—

(i) starting of short-term training courses for Village Vaidyas; and

(ii) cultivation of medicinal plants and herbs in villages?

THE HON. SRI M. A. MANICKAVELU : (i) Yes, Sir.

(ii) No.

VIDWAN T. MUTHUKANNAPPAN : குறுகிய பயிற்சிக் காலம் என்பது எவ்வளவு நாட்கள்? அதற்கு எடுக்கப்படக்கூடிய நபர்களுக்கு ஏதாவது யோக்கியதாம்சம் கோரப்படுகிறதா? அப்படியானல் அது யாது?

THE HON. SRI M. A. MANICKAVELU : புதிதாக யோக்கிய தாம்சம் ஒன்றும் இதில் கோரப்படவில்லை. இருக்கும் யோக்கிய தாம்சத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கு மூன்று மாதங்கள் பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டி ருக்கிறது. தொத்து நோய்கள் வந்தால் அந்தக் காலத்தில் இவர்கள் உபயோககரமாக இருப்பதற்காக 'ப்ரிவெண்டிவ் ஸைட்'-இல் இவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமான கமிட்டி என்ன சிபாரிசு செய்கிறதோ அதையொட்டித்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

VIDWAN T. MUTHUKANNAPPAN : முக்கிய கிராமங்களில் மூலிகைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும் என்று திட்டக் கமிஷனின் முக்கிய அங்கத்தினரான ஸ்ரீமான் நாராயணன் அவர்கள் சொன்னது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இல்லை. இதை பேப் பரில் கண்ணுல் பார்த்தேன், இங்கே கேட்கிறேன். அவ்வளவுதான். மற்றப்படி, 'அபிஷியலாக' எனக்கு அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் வரவில்லை.

VIDWAN T. MUTHUKANNAPPAN : அவ்வாறு செய்வது சிறந்த தாக இருக்கும் என்று அரசாங்கம் கருதவில்லையா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கம் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறது. மூலிகைகளேயும் மற்றவை களேயும் எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்றெல்லாம் அந்தக் கமிட்டியிலிருந்து ஆலோசனைகள் வந்த பிறகு, இந்த 'ஆஸ்பெக்ட்'-ஐயும் கவனிக்கலாம்.

VIDWAN T. MUTHUKANNAPPAN : இந்தக் கமிட்டியில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு, இந்த மன்றத்தில் கேட்ட ஒரு கேள்விக்கு பதில் சொன்னபோது ஏற்கெனவே பதிலளித்திருக்கிறேன்.